# 2. தேசிய வருமானமும் செலவும்

## 2.1 பொதுவான போக்குகள்

1998இல் உண்மை நியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 1997 இல் பதிவு செய்யப்பட்ட 6.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ. உற்பத்தியின் வளர்ச்சி குறைவாக இருந்தபோதும், இது கிழக்காசிய நாடுகளின் நெருக்கடிக்குப்பின்னர் தோற்றம் பெற்ற சாதகமற்ற உலகளாவிய பொருளாதார நிலைமைகளுக்கிடையே எய்தப்பட்டது. இலங்கையின் முக்கிய ஏற்றுமதிகளில் பெரும்பாலானவை உலகளாவிய மந்த நிலைமையினாலும் கிழக்காசிய நாடுகளின் போட்டியினாலும் பாதிக்கப்பட்டன. எனினும் அதே நேரம், இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளின் விலை அனுகூலங்களிலிருந்தான நன்மைகள் தயாரிப்புத்துறை மற்றும் கட்டடவாக்கத்துறைகளுக்குக் கிடைத்தன. பொதுவாக, தனியார் மற்றும் அரச துறைகள் இரண்டிலும் முதலீட்டில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் நுகர்வோர் செலவில் ஏற்பட்ட உயர்வு என்பனவற்றின் காரணமாக உள்நாட்டுக் கேள்வி வலுவாகக் காணப்பட்டது. இது, நலிவடைந்த வெளிநாட்டுக் கேள்வியின் எதிர்க்கணிய தாக்கத்தினைத் தணிக்க உதவியது.

வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்திற்கு சீராக்கம் செய்யப்பட்ட மொ.உ.உற்பத்தி என வரைவிலக்கணம் செய்யப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி 4.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மொ.தே.உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சி வீதம் சிறிதளவு குறைந்த வீதத்தில் காணப்பட்டமைக்கு வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் மோசமடைந்தமையே காரணமாகும். இதற்கு வெளிநாட்டு முதலீட்டு வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களின் வடிவில் ஏற்பட்ட உயர்ந்த வெளிப்பாய்ச்சல்களுமே காரணமாகும். 1996 இற்கும் 1997 இற்குமிடையில் தேறிய வெளிநாட்டு முதலீட்டு வருமானம் ஐ.அ.டொலர் 37 மில்லியனால் அதிகரித்தமைக்கு மாறாக 1997இற்கும் 1998இற்குமிடையில் இவற்றின் வெளிப்பாய்ச்சலில் ஐ.அ.டொலர் 19 மில்லியன் கொண்ட தேறிய அதிகரிப்பொன்று காணப்பட்டது. 1998இல் முதலீட்டு வருமானப் பெறுகைகளில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சிக்கு குறைவான பன்னாட்டு வட்டிவீதங்களே காரணமாகும். அதே வேளை வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்ட வருமானத்தின் பெருமளவு வெளிப்பாய்ச்சல் 1996- 1998 காலப்பகுதியில் வெளிநாட்டு நேரடி முதலீட்டில் ஏற்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சியுடன் ஒத்துப்போவதாகக் காணப்பட்டது.

நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி ரூ.1,015 பில்லியன்கள் என மதிப்பிடப்பட்டது. 1998இல் நடுவாண்டுக் குடித்தொகை 18.8 மில்லியனாக அமைந்து 1997 இனைவிட 1.2 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டது. இதன்படி, தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 1997 இன் ரூபா 47,988 இலிருந்து (ஐ.அ.டொலர் 814) 1998இல் ரூ.54,035 இற்கு (ஐ.அ.டொலர் 837) அதிகரித்தது. தலைக்குரிய வருமானத்தின்படி உலக வங்கியினால் நாடுகள் பகுப்பாய்வு செய்யப்படுகையில் தற்பொழுது இலங்கை ஐ.அ.டொலர் 795- ஐ.அ.டொலர் 3,125 வீச்சினைக் கொண்ட தலைக்குரிய வருமானத்தைக் கொண்ட "குறைந்த நடு வருமானமுடைய"நாடுகளின் தொகுதிக்குள் இருக்கிறது. அடுத்த பத்தாண்டுகளில் மேல் நடு வருமான நாடொன்றின் நிலைமையினை எய்துவதற்கு நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் ஏறத்தாழ 8 சதவீதமாக இருத்தல் வேண்டும். இலங்கை 6-7 சதவீதமான உறுதியான வளர்ச்சி வீதத்தினைப் பேணுவதற்கானாலும் உற்பத்தியாக்கத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படுகிறது என்ற எடுகோளில் அதனது உள்நாட்டு முதலீடு மொ.உ. உற்பத்தியில் குறைந்தது 30 சதவீதத்திற்கு உயர்த்தப்பட வேண்டியிருக்கும். பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட அண்மைய மெதுவான போக்கினையும் உலகப் பொருளாதாரத்திற்கான மோசமான வாய்ப்புக்களையும் கருத்திற் கொள்கையில் இந்த அளவிலான உறுதியான வளர்ச்சியை எய்துகின்றதென்பது சாத்தியமான தொன்றாகத் தோன்றவில்லை. இலங்கையின் உயர்ந்து வரும் தலைக்குரிய வருமானத்தினை நோக்குகையில் குறிப்பாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் சலுகை ரீதியான உதவி வீழ்ச்சியடைகின்றதொரு சூழ்நிலையில் இலங்கையின் வெளிநாட்டு மூலவளத் தேவை அனைத்தையும் ஈடு செய்வதற்கு சலுகைரீதியான வெளிநாட்டு உதவிகளை இலங்கையினால் பெறமுடியும் போல் தோன்றவில்லை. எனவே உள்நாட்டு சேமிப்புக்கள் கணிசமாக அதிகரித்தாலொழிய எதிர்கால அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கான சில வெளிநாட்டு நிதியிடல்களை பன்னாட்டு மூலதனச் சந்தைகளினூடாகவே திரட்ட வேண்டியிருக்கும்.

மொ.உ.உற்பத்திக்கான விகிதமாக மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 1997 இன் 24.4 சதவீதத்திலிருந்து 1998இல் 25.4 சதவீதத்திற்கு சிறிதளவு உயர்வடைந்தது. 1994/ 95 இல் உச்ச மட்டத்தை அடைந்திருந்த முதலீட்டு விகிதம் 1996இல் வீழ்ச்சியடைந்ததெனினும், திறந்த பொருளாதாரக் கொள்கைகள் பேணப்படும் என்ற அரசின் உறுதிப்பாட்டில் முதலீட்டாளர்கள் நம்பிக்கை வைத்தமையின் பின்னர் மீட்சியடைந்தது. மீதப்படுத்தப்பட்ட வருவாய்களின் அதிகரித்த மட்டத்திற்கு இட்டுச் சென்ற கூட்டு இலாபங்களில் ஏற்பட்ட வளர்ச்சி, வட்டி

வீதங்களின் மிதமான தன்மை, பணவீக்கம் குறைவடைந்தமை முதலீட்டுப் பொருட்கள் மீதான குறைந்த இறக்குமதித் தீர்வைகள் என்பன உள்நாட்டு முதலீடுகள் மீது சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன. 1996 உடனும் 1997 உடனும் ஒப்பிடுகைளில் சிறிதாக இருந்தபோதும் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சலிலும் அதிகரிப்புக் காணப்பட்டது. அத்தோடு 1998 சார்பு ரீதியில் தொழிலாளர் அமைதியின்மை குறைந்த ஆண்டாகவும் இருந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே பொருளாதார நடவடிக்கைகள் சார்பு ரீதியில் தடைகளின்றித் தொழிற்பட்டன. இவ்வபிவிருத்திகள் முதலீட்டாளர் மனோபாவத்தினை வலுப்படுத்த உதவின.

உண்மை நியதிகளில் தயாரிப்புத்துறை, 6.3 சதவீதத்தினால் அதிகரித்து உண்மை மொத்தத் தேசிய உற்பத்தியின் நாலில் ஒரு பங்கு வளர்ச்சிக்கு பெரும்பாலும் உதவியது. 1997 இன் தயாரிப்பு வெளியீட்டில் 78 சதவீதத்திற்கு வகை கூறிய தொழிற்சாலைக் கைத்தொழில்கள் 1998இல் 7.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் இவ்வளர்ச்சிக்கான பாரிய பங்களிப்பு உள்நாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பதிலிறுக்கும் வகையில் உள்நாட்டுச் சந்தை சார்ந்த கைத்தொழில் களிலிருந்தே கிடைத்தது. இது, ஏற்றுமதிசார்ந்த கைத்தொழில்களின் வளர்ச்சியின் மூலம் தூண்டுதல் காணப்பட்ட அண்மைய ஆண்டுகளின் பொருளாதாரத்தின் வளர்ச்சிப் போக்கிற்கு மாறானதாக இருந்தது. பொருளாதாரத்தின் ஏற்றுமதி வருவாய்களிலும் அதேபோன்று தொழில்வாய்ப்பு உருவாக்கத்திலும் முக்கிய பங்கினைக் கொண்டுள்ள புடவை மற்றும் அணியும் ஆடைகள் துணைத்துறை உலக வர்த்தகம் பெருமளவு சுருக்கமடைந்தமையின் காரணமாக கடுமையான போட்டியை எதிர்நோக்கியது. தொழிற்சாலைக் கைத்தொழில்களின் உண்மை வெளியீட்டின் வளர்ச்சிக்கு புடைவை அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்களின் பங்களிப்பு 1997 இன் 69 சதவீதத்தடன் ஒப்பிடுகையில் 1998இல் 24 சதவீதமாக மட்டும் இருந்தமைக்கு இத் துணைத் துறைகளிலுள்ள உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி வளர்ச்சி குறிப்பிடத்தக்களவிற்கு மெதுவடைந்தமையே காரணமாகும். தயாரிப்பில், முன்னேற்றம் கண்ட தொழில் நுட்பங்களின் பயன்படுத்தலை ஊக்குவிப்பதற்கான இறை ஊக்குவிப்புக்கள் உட்பட கடந்த காலத்தின் வரவு செலவுத் திட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர்ச்சியான கொள்கை வழிமுறைகள் கைத்தொழில் உற்பத்திகளின் இயலளவு விரிவடைவதற்கும் கைத்தொழில் அடிப்படை மிகக் கூடுதலாக பன்முகப்படுத்துவதற்கும் வழிவகுத்தன. முன்னேற்றம் கண்ட தொழில் நுட்பங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் கைத்தொழில் துறைகள் பலவற்றில் உற்பத்தியாற்றலை அதிகரித்துள்ளமையானது கூலிகளிலும் சம்பளங்களிலும் ஏற்பட்ட மிதமான அதிகரிப்பு வீதத்தினை எதிரீடு செய்வதற்கு இத்துறைகளை இயலச் செய்தன.

1997உடன் ஒப்பிடுகையில் (5.4 சதவீதம்) 1998இல் கட்டடவாக்கத்துறை உயர்ந்த வளர்ச்சி வீதத்தினைப் (7.1 சதவீதம்) பதிவு செய்துள்ளது. இது உட்கட்டமைப்பு அபிவிருத்தியுடன் தொடர்பான அரச முதலீடுகளின் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் வதிவிடத் தொகுதிகள், வலு உருவாக்கச் செயற்றிட்டங்கள், தொடர்பூட்டல் வலையமைப்பு மற்றும் தொழிற்சாலைகள் என்பனவற்றை உள்ளிட்ட வர்த்தகச் சொத்து அபிவிருத்தியில் தனியார்துறை முதலீடுகளில் ஏற்பட்ட வளர்ச்சி என்பனவற்றின் இணைந்த விளைவாகும்.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே, மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சிக்கான பெரும் பங்களிப்பு வலு போக்குவரத்து, தொடர்பூட்டல், துறைமுகப் பணிகள் வர்த்தகம் மற்றும் நிதியியல் பணிகள் என்பனவற்றை உள்ளடக்கிய பணிகளில் ஏற்பட்ட விரிவாக்கத்திலிருந்தே கிடைத்தது. போக்குவரத்து, துறைமுகப்பணிகள் மற்றும் தொடர்பூட்டல் துறை 7.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து பணிகளில் ஏற்பட்ட 30 சதவீத வளர்ச்சிக்கு வகைகூறின. தொலைத் தொடர்பூட்டல் வலையமைப்பின் விரிவாக்கத்திலும் பெறுமதி கூட்டப்பட்ட தொடர்பூட்டல் பணிகளின் வழங்கலிலும் தனியார்துறையின் பங்களிப்பு அதிகரித்தமையின் காரணமாக தொலைத் தொடர்பூட்டல் துணைத்துறை தொடர்ந்தும் இயக்க விசையுடன் காணப்பட்டது. இது தொலைத் தொடர்பூட்டல் துறையில் அதிகூடிய 46 சதவீத வளர்ச்சியைத் தோற்றுவித்தது. முதனிலை மற்றும் இரண்டாம் நிலைத் துறைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்தின் விளைவாக போக்குவரத்தில் செலுத்தப்பட்ட கவனம் அதிகரித்ததன் காரணமாக போக்குவரத்துப் பணிகள் 3.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. துறைமுகப் பணிகளின் வளர்ச்சி 1997 இன் 16.8 சதவீதத்திலிருந்து 2.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு மாற்றிக் கப்பலேற்றல் சரக்குக் கையாளல் குறைவடைந்தமையே காரணமாகும். வர்த்தகப் பணிகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கான தூண்டுதல், உள்நாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட உயர்வுடன் சேர்ந்து இறக்குமதி மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட விரிவாக்கத்திலிருந்து கிடைக்கப்பெற்றது.

1998இல், மின்வலு, வாயு மற்றும் நீர்த்துறை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் விரைவான வளர்ச்சியைப் பதிவு செய்தது. கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறைகளிலிருந்தான கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு ஈடுகொடுக்கும் வகையில் மின்வலு

உருவாக்கம் விரிவடைந்தது. 1996ஆம் ஆண்டின் பின்னர் மின்சபை, தனியார்துறை ஆகிய இரண்டினதும் பெரும் முதலீடுகளைத் தொடர்ந்து உருவாக்க இயலளவு விரிவடைந்தமையினால் மின்வலுவிற்கான அதிகரித்த கேள்வியை இத்துறையினால் ஈடு செய்யக் கூடியதாகவிருந்தது. 1998இல் மின்வலு உருவாக்கம் 13 சதவீதத்தினால் அதிகரித்தது.

வேளாண்மைத்துறை உண்மை நியதிகளில் 2.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து 1998இன் உண்மை மொ.தே.உற்பத்தியின் 12.0 சதவீத வளர்ச்சிக்குப் பங்களித்தது. வேளாண்மையில் ஏற்பட்ட வளர்ச்சி, முறையே 18.3 சதவீதத்தினாலும், 8.3 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்த நெல் மற்றும் மீன்பிடித் துணைத் துறைகளிலிருந்து கிடைத்தது. நெல்துறையில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு நீர் பெருமளவில் கிடைக்கக் கூடியதாக இருந்தமையால் நெற் செய்கையின் கீழ் கொண்டு வரப்பட்ட நிலப்பரப்பு அதிகரித்தமை, அதிகரித்த வளமாக்கிப் பாவனையின் காரணமாக ஏற்பட்ட உயர்ந்த விளைச்சல் வீதம், 1997 உடன் ஒப்பிடுகையில் சாதகமான வானிலை நிலைமைகள் என்பன முக்கிய காரணங்களாக இருந்தன. மீன்பிடித் துணைத்துறையின் விரிவடைந்த உற்பத்திக்கு கிழக்குக் கரையோர வலயத்தில் மீன்பிடி மீண்டும் தொடங்கியமையும் இறால் பண்ணை வளர்ப்பு உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சியுமே காரணமாகும். இவ்வபிவிருத்திகளும் மீன்பிடி உற்பத்தியிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு வழிவகுத்தன. "ஏனைய" வேளாண்மைத்துறை கலப்பான செயலாற்றத்தினைக் காட்டியது. விலங்கு வளர்ப்பு மற்றும் காய்கறிகள் முன்னைய ஆண்டினைவிட சிறந்த செயலாற்றத்தினைக் காட்டிய வேளையில் இறக்குமதிகளிலிருந்தான போட்டியின் காரணமாக துணை உணவுப் பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பெருந்தோட்ட வேளாண்மையில், தேயிலை உற்பத்தி தொடர்ந்தும் அதிகரித்தது. ஆண்டின் முதலரைப் பகுதியில் தேயிலை விலைகள் உறுதியாக இருந்ததெனினும் அதன் பின்னர் அதிகரித்த உலகளாவிய நிரம்பல், ருசியாவிற்கான தேயிலை ஏற்றுமதியைச் சூழ்ந்து காணப்பட்ட நிச்சயமற்ற சந்தை என்பனவற்றின் காரணமாக வீழ்ச்சியடைந்தது. இறப்பர் விலைகள் உற்பத்திச் செலவிலும் பார்க்க கீழே வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக இலாப எல்லை மிகச் சிறிதாகக் காணப்பட்ட இறப்பர் பாலெடுத்தல் இலாபமற்றதாக மாறியமையினால் இறப்பர் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. அதே வேளை பொதுவான வீழ்ச்சியொன்றினை எதிர் நோக்குவதாகத் தென்படும் தெங்கு உற்பத்தி 3.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1998இல் நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ.உ.உற்பத்தி 13.6 சதவீதத்தினால் ரூ.913 பில்லியன்களுக்கு அதிகரித்தது. இதன்படி, பொருளாதாரத்தில் பொதுவான விலை மாற்றத்தின் ஒரு அளவீடான உட்கிடை மொ.உ.உற்பத்தி விலைச் சுருக்கி 1997 இன் 8.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இப்போக்கு பணவீக்கத்தின் மற்றைய குறிகாட்டிகளுடன் இசைந்ததாகவுள்ளது.

செலவினப் பக்கத்தில் நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவு ரூ.1,080 பில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் 1997இனைவிட 13.3 சதவீதம்கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. மொ.உ. செலவில் பெரும் பங்கினைக் கொண்டுள்ள நுகர்வுச் செலவு 12 சதவீதத்தினால் அதிகரித்தது. 1998இல் 9.4 சதவீதத்திற்கு கூட்டு நுகர்வு அதிகரிப்பு சீராக்கப்பபட்ட வேளையில் இது உண்மை நுகர்வில் ஏற்பட்ட அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. உண்மை நியதிகளில் தனியார் நுகர்வுச் செலவு 3 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் பெயரளவு நியதிகளில் அதிகரிப்பு 16 சதவீதமாக இருந்தது. தனியார் நுகர்வுச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு உந்து ஈருருளிகள் மற்றும் ஊர்திகள் என்பனவற்றின் புதிய பதிவுகள் உணவு மற்றும் குடிபானக் கைத்தொழில்களின் விற்பனை மொத்தப் புரள்வு மற்றும் உணவல்லா நுகர்வு விடயங்களின் இறக்குமதி போன்ற குறிகாட்டிகளில் பிரதிபலிக்கப்பட்டது. மேலும் மின்வலு, குழாய் வழி நீர், தொலைத் தொடர்பூட்டல் போன்ற பணிகளுக்கான குடியிருப்பாளர் கேள்வியும் பயணிகள் போக்குவரத்துக்கான கேள்வியும்குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தினை எடுத்துக்காட்டியது. தொழில் நிலையிலும் உண்மைக் கூலியிலும் ஏற்பட்ட அதிகரிப்பு வெளிநாட்டிலிருந்தான தனியார் பணவனுப்பல்களில் ஏற்பட்ட வளர்ச்சி ஆகியன உயர்ந்த பங்கீட்டு வருமானத்தினை உருவாக்கி தனியார் நுகர்வுச் செலவினத்தின் அதிகரிப்பிற்கு இட்டுச் சென்றன. அரச நுகர்வுச் செலவு வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு பாதுகாப்புடன் தொடர்பான செலவினத்தில் ஏற்பட்ட உயர்வே முக்கிய காரணமாகும்.

1998இல் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் ரூ.257 பில்லியனுக்கு 18.5 சதவீதத்தினால் உயர்வடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மூலதன வாக்கத்தில் ஏற்பட்ட விரிவாக்கமானது மூலதனப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட கணிசமான உயர்வு, கட்டடவாக்கத் துறையில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சி வீதம், வெளிநாட்டு நேரடி முதலீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் வங்கித்தொழில் முறையினால் வழங்கப்பட்ட நீண்டகாலக் கடன்களின் வளர்ச்சி போன்றவற்றை உள்ளடக்கிய பல குறிகாட்டிகளில்பிரதிபலிக்கப்பட்டது. அரச முதலீடு 1997இன் ரூ.52 பில்லியனிலிருந்து 1998 இல் ரூ.68

பில்லியனுக்கு அதிகரித்தது. அரச முதலீட்டில் ஒப்பீட்டு ரீதியில் மின் வலு உருவாக்கம் மற்றும் பங்கீடு, கொழும்புத் துறைமுகத்தின் நவீனப்படுத்தல். பாதைகளின் நிருமாணமும் புனரமைப்பும், வீடமைப்பு மற்றும் கைத்தொழில் அமைவிடங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி என்பனவற்றில் பாரிய செலவினங்கள் அவதானிக்கப்பட்டன. அரச முதலீட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக வெளிநாட்டு நீண்டகாலக் கடன்பாடுகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன.

இன்னுமொரு சிறந்த நிகழ்வாக மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்கள் விகிதம் 1997 இன் 17.3 சதவீதத்திலிருந்து 1998இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி 18.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. உயர்ந்த வீத சேமிப்புக்களுக்கான பங்களிப்பு தனியார்துறையிலிருந்து முக்கியமாக உயர்ந்த கூட்டுச் சேமிப்புக்களிலிருந்து கிடைத்த வேளையில் அரசதுறையின் எதிர்க்கணிய சேமிப்பு அரசிறை வீழ்ச்சி மற்றும் உயர்ந்து செல்லும் நடைமுறைச் செலவினம் என்பனவற்றின் காரணமாக அதிகரித்தது. தேசிய சேமிப்பு விகிதம் 1997இன் 21.5 சதவீதத்திலிருந்து 1998இல் 23.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. முதலீட்டுச் சேமிப்பு இடைவெளி மொ.உ.உற்பத்தியின் 2.2 சதவீதத்திற்கு குறைக்கப்பட்ட வேளையில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தான நீண்டகாலக் கடன் வழங்கலின் மூலமாகவும் பற்றாக்குறை ஈடுசெய்யப்பட்டது. அண்மைய ஆண்டுகளில் தேசிய சேமிப்புக்களில் காணப்பட்ட மேம்பாடானது ஊக்கமளிக்கக் கூடியதாக இருந்த போதிலும் இது இன்னமும் தேவையான முதலீட்டு மட்டங்களுக்குக் கீழாகவே காணப்படுவதுடன் ஆசிய நாடுகள் பலவற்றினால் எய்தப்பெற்ற அதி உயர் வீதங்களைவிட மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது.

## 2.2 துறைவாரியான செயலாற்றம்

தொழிற்சாலைக் கைத்தொழில், பெருந்தோட்டப் பயிர்களின் பதனிடல், மற்றும் சிறு கைத்தொழில்கள் என்பனவற்றை உள்ளடக்கிய தயாரிப்புத்துறை 1997இன் 9.1 சதவீதத்துடன் ஒப்பிடுகைளில் 1998இல் 6.3

**அட்டவணை 2.1**

**விலைகளில் (1996) மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும்**

| துறை | சதவீத அதிகரிப்பு (%) | | மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பின் சதவீதப் பங்கு | | மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதப் பங்கு | |
|---|---|---|---|---|---|---|
| | 1997(அ) | 1998(அ) | 1997(அ) | 1998(அ) | 1997(அ) | 1998(அ) |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில் கடற்றொழில் | 3.0 | 2.5 | 10 | 11.9 | 22.0 | 21.5 |
| வேளாண்மை | 2.9 | 1.8 | 7.6 | 6.6 | 17.3 | 16.8 |
| தேயிலை | 7.1 | 1.1 | 1.6 | 0.4 | 1.5 | 1.5 |
| இறப்பர் | -5.4 | -9.0 | -0.5 | -1.0 | 0.5 | 0.5 |
| தெங்கு | 3.3 | -3.2 | 0.9 | -1.3 | 1.8 | 1.7 |
| நெல் | 11.2 | 18.3 | 4.8 | 11.9 | 3.0 | 3.4 |
| ஏனையவை | 0.5 | -1.5 | 0.7 | -3.4 | 10.4 | 9.8 |
| காட்டுத்தொழில் | 1.3 | 1.2 | 0.4 | 0.5 | 2.0 | 2.0 |
| கடற்றொழில் | 5.0 | 8.3 | 2.0 | 4.8 | 2.7 | 2.8 |
| 2. சுரங்கம் அகழ்தலும் கல்லுடைத்தலும் | 3.8 | -5.4 | 1.2 | -2.3 | 2.0 | 1.8 |
| 3. தயாரிப்புத் தொழில் | 9.1 | 6.3 | 22.1 | 22.9 | 16.8 | 17.1 |
| தேயிலை, இறப்பர், தெங்கு உள்ளீட்டுப் பதனிடல் | 3.5 | -1.2 | 1.2 | -0.6 | 2.3 | 2.2 |
| தொழிற்சாலைக் கைத்தொழில் | 10.3 | 7.6 | 19.5 | 21.7 | 13.2 | 13.6 |
| சிறு கைத்தொழில் | 7.0 | 6.5 | 1.3 | 1.8 | 1.3 | 1.3 |
| 4. கட்டடவாக்கம் | 5.4 | 7.1 | 5.6 | 10.6 | 7.0 | 7.1 |
| 5. மின்வலு, வாயு, நீர், நலத்துறைப் பணிகள் | 8.1 | 10.1 | 1.6 | 2.9 | 1.4 | 1.4 |
| இதில்: | 8.4 | 9.8 | 0.6 | 0.8 | 1.1 | 1.1 |
| மின்வலு | | | | | | |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பு | 8.8 | 7.7 | 14 | 18.2 | 11.0 | 11.3 |
| இதில்: | | | | | | |
| தொடர்பு | 31.6 | 45.8 | | | | |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் | 6.3 | 4.5 | 21.2 | 21.6 | 22.6 | 22.5 |
| இறக்குமதி | 9.6 | 8.2 | 13.4 | 17.0 | 9.7 | 10.0 |
| ஏற்றுமதி | 12.0 | 0.1 | 4.2 | 0.1 | 2.5 | 2.4 |
| உள்நாடு | 2.2 | 2.0 | 3.6 | 4.6 | 10.4 | 10.1 |
| 8. வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து | 10.3 | 6.4 | 11 | 10.2 | 7.5 | 7.6 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை | 1.3 | 1.2 | 0.4 | 0.5 | 2.0 | 1.9 |
| 10.பொது நிருவாகமும் பாதுகாப்பும் | 5.2 | 3.0 | 4.0 | 3.3 | 5.1 | 5.0 |
| 11.பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) | 6.1 | 3.7 | 3.6 | 3.1 | 4.0 | 4.0 |
| 12.மொத்த உள்நாட்டு உற்பத்தி | 6.3 | 4.7 | 94.7 | 103.1 | 101.2 | 101.3 |
| 13.வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம் | | | 5.3 | -3.1 | -1.2 | -1.3 |
| 14.மொத்த தேசிய உற்பத்தி | 6.8 | 4.6 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. வளர்ச்சி சிறிதளவு மெதுவடைந்துள்ளமை ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களில் முக்கியமாக பிரதிபலிக்கப் பட்டமைக்கு வெளிநாட்டுக் கேள்வியிலும் இறப்பர் மற்றும் தெங்கு உற்பத்திப் பொருட்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் மூலம் பாதிக்கப்பட்ட பெருந்தோட்டப் பயிர்களின் பதனிடலிலும் காணப்பட்ட மெதுவான போக்கே காரணமாகும். 1997இல் தயாரிப்புத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதியின் பெரும்பாலும் 78 சதவீதத்திற்கு வகை கூறிய தொழிற்சாலைக் கைத்தொழில்கள் துணைத்துறை முன்னைய ஆண்டின் 10.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1998இல் 7.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. உலகளாவிய நிதியியல் நெருக்கடி மற்றும் பண்ட விலைகள் மந்தமடைந்தமை என்பனவற்றைத் தொடர்ந்து உருவாகி இவ்வாண்டில் அவதானிக்கப்பட்ட உலக வர்த்தகத்தின் கடுமையான வீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்ட பாதகமான வெளிநாட்டுக் காரணிகளினால் 1998இல் இத்துறையின் செயலாற்றம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. 1998இல் தொழிற்சாலைக் கைத்தொழிலில் ஏற்பட்ட பெரும்பாலும் 75 சதவீதமான வளர்ச்சிக்கு உணவு, குடிபானம், புகையிலை, புடவை அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள், இரசாயனம் பெற்றோலியம், பிளாத்திக்கு மற்றும் இறப்பர் உற்பத்திப் பொருள் வகைகளின் உற்பத்தியில் ஏற்பட்ட விரிவாக்கமே காரணமாகும். உணவு, குடிபானம் மற்றும் புகையிலை துணைத்துறையின் வளர்ச்சி 1997 இன் 3.4 சதவீதத்திலிருந்து 9.6 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு முக்கியமாக பதனிடப்பட்ட தானிய உணவு, பதனிடப்பட்ட இறைச்சி உற்பத்திப் பொருட்கள் மற்றும் குடிபானவகைகளின் உள்நாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் துணைத்துறையின் வெளியீடு 13.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் வெளியீடு அதிகரித்தமையே காரணமாகும். முன்னைய ஆண்டில் வழமையான பேணல் நோக்கங்களுக்காக இரண்டு மாதங்களுக்கு மூடப்பட்டிருந்த பெற்றோலிய தூய்மியின் உற்பத்தி 1998இல் ஆண்டு முழுவதும் தொடர்ந்து இடம் பெற்றது. கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் பி.வி.சி குழாய்கள் மற்றும் துணைப் பொருட்கள், தீந்தைகள் மற்றும் இரசாயனங்கள் என்பனவற்றிற்கான கேள்வியைத் தூண்டிய வேளையில் பிளாத்திக்கு மற்றும் பொலித்தீன் உற்பத்திகளுக்கான கேள்வியில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு ஆடைக் கைத்தொழில் முக்கிய காரணமாக விளங்கி இத்துணைத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களித்தது. புடவை, அணியும் ஆடைகள் தோல் உற்பத்திப் பொருட்கள் துணைத்துறையின் வளர்ச்சி வீதம் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு கிழக்காசியாவின் நிதியியல் நெருக்கடிகளினால் பாதிக்கப்பட்ட சாதகமற்ற வெளிநாட்டுக் காரணிகளே காரணமாகும். கட்டட மூலப் பொருட்களின் முக்கியமாக சீமெந்து, கூரைப் பொருட்கள் மற்றும் மட்பாண்ட ஓடுகளின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் வகையின் உயர்ந்த வளர்ச்சி வீதத்திற்கு இட்டுச் சென்றது. பதனிடல் கைத்தொழில் இறப்பர் மற்றும் தெங்கு உற்பத்திப் பொருட்களின் பின்னடைவினால் பாதிக்கப்பட்டது.

1998இல் கட்டடவாக்கத்துறை 1997 இன் 5.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. வீடமைப்புக் கட்டடவாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் தனியார்துறையின் பங்கேற்பினை ஊக்குவிப்பதற்காக 1998 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் பல ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன. மேலும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மை சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டமும் 1998இல் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக் காட்டியது. கட்டடவாக்கத்தில் ஏற்பட்ட வளர்ச்சி சீமெந்து, கல்நார்த்தகடுகள்,உருக்கு, பிவிசி குழாய்கள் போன்ற கட்டடவாக்கப் பொருட்களின் விற்பனை மீது ஏற்பட்ட அதிகரிப்புக்களின் மூலம் எடுத்துக் காட்டப்பட்டது. 1998 இன் முதல் ஒன்பது மாதங்களில் வீடமைப்புச் சொத்து அபிவிருத்திக்காக வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட தேறிய முற்பணங்கள் 1997 இன் தொடர்பான காலப் பகுதிக்குரிய ரூ. 1.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.5.8 பில்லியனாகக் காணப்பட்டது.

பொதுவான பணிகள் துறையில், மின்வலு, வாயு மற்றும் நீர்த்துறை மற்றைய அனைத்து துறைகளையும்விட சார்பு ரீதியில் சிறந்த முறையில் செயலாற்றியது. இது 1997 இன் 8.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1998 இல் 10.1 சதவீதம் கொண்ட உயர்ந்த வளர்ச்சி வீதத்தினைப் பதிவு செய்தது. பொதுவான துறையில் செல்வாக்குக் கொண்டுள்ள மின்வலுத் துணைத்துறை ஆண்டிற்கு சராசரி 10 சதவீதத்தில் உயர்ந்து செல்கின்ற கேள்வி காணப்பட்டபோதும் தடங்கலற்ற வலு வழங்கலைப் பேணக் கூடியதாக இருந்தது. மின்சபை மற்றும் தனியார்துறை இரண்டின் கீழுமான வெப்பவலு உருவாக்கத்தில் ஏற்பட்ட விரிவும் பெருமளவில் நீர் கிடைக்கத்தக்கதாக இருந்ததன் காரணமாக தொடர்ச்சியான நீர் மின்வலு உருவாக்கமும் இவ்வளர்ச்சிக்கு உதவின. வலு உருவாக்கத்தின் நிறுவப்பட்ட இயலளவு 1997இன் 1586 மெகாவாட் மணித்தியாலங்களிலிருந்து 1998 இல் 1626 மெகாவாட் மணித்தியாலத்திற்கு அதிகரித்தது. வலு உருவாக்கத்தில் தனியார்துறையின் பங்கேற்பு தொடர்ந்தும் விரிவடைந்தது.

போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், மற்றும் தொடர்பூட்டல் துணைத்துறை 1998இல் 7.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 1998இல் மொ.உ.உற்பத்தி வளர்ச்சியில் மெதுவான போக்குக் காணப்பட்டபோதும் இத்துறை முக்கியமான வளர்ச்சியைப் பேணியது. திரண்ட மொ.தே.உற்பத்தியின் வளர்ச்சிக்கான இதன் பங்களிப்பு 1997 இன் 14.0 சதவீதத்திலிருந்து 1998 இல் 18.2 சதவீதத்திற்கு உயர்வடைந்துள்ளது. துறைமுகப் பணிகளின் கூட்டப்பட்ட பெறுமதி 1997இன் 16.8 சதவீதத்திலிருந்து 1998இல் 2.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. போக்குவரத்துத் துறையில் இது, 5.7 சதவீதத்திலிருந்து 4.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1998இல் காணப்பட்ட தொலைத் தொடர்பூட்டல் துறையின் வலுவான வளர்ச்சிச் செயலாற்றம் மற்றைய இரு வகைகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சியை எதிரீடு செய்யக் கூடியதாக இருந்ததுடன் பொதுவான வளர்ச்சி வேகத்தையும் பேணியது. இதன் வளர்ச்சி வீதம் 1997 இன் 31.6 சதவீதத்திலிருந்து 1998இல் குறிப்பிடத்தக்க 45.8 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

அரச மற்றும் தனியார் துறைகளின் போட்டியுடன் தொலைத்தொடர்பூட்டல் கைத்தொழில் தொடர்ந்தும் விரைவாக வளர்ச்சியுற்றமைக்கு இலங்கை ரெலிகொம் மற்றும் தனியார் தொழிற்பாட்டாளர்களின் அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் கீழ் இயலளவு விரிவடைந்தமையே காரணமாகும். அதிகரித்துச் செல்லும் வளர்ச்சிப்போக்கு 1997, 1998 முழுவதும் தொடர்ந்து காணப்பட்டது. இலங்கை ரெலிகொம் 1998இல் ஏறத்தாழ 143,000 புதிய தொலைபேசி இணைப்புக்களை வழங்கக்கூடியதாக இருந்தது. பல்வேறு பணிகளைக் கொண்ட மற்றைய அனைத்து தனியார்துறை தொழிற்பாட்டாளர்களது வாடிக்கை யாளர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 124,000ஆகக் காணப்பட்டது. இக்காலப்பகுதியில் ஒன்று சேர்ந்த முதலீடு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. இவ்விரிவாக்க செயற்றிட்டங்கள் தொலைபேசியின் அடர்த்தியை 1997இன் 59 பேருக்கு ஒரு தொலைபேசி என்ற நிலையிலிருந்து 1998இல் 41 பேருக்கு ஒரு தொலைபேசி என்ற நிலைக்கு மேலும் முன்னேற்றம் காண வழியமைத்தது. வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை நியதிகளில் கைத்தொழிலில் ஏற்பட்ட விரிவாக்கத்திற்குப் புறம்பாக அதிகரித்த போட்டியின் காரணமாக பணிகளின் தரமும் மேம்பட்டது. பணிகளின் பல தரப்பட்ட வகைகள் மற்றும் அவற்றினது தரம் என்பனவற்றின் நியதிகளில் அஞ்சல் பணிகளும் மேம்பட்டன. அஞ்சல் திணைக்களம் மின்னியல் அஞ்சல் போன்ற வசதிகளையும் 1998இல் வழங்கியது.

பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து என்பனவற்றை உள்ளடக்கிய போக்குவரத்துத்துறை வீதிகள், புகைவண்டி மற்றும் வான் வழி ஆகிய மூன்று வேறுபட்ட பிரிவுகளைக் கொண்டுள்ளது. 1998இல் இவ்வனைத்து துறைகளினதும் இணைந்த வளர்ச்சி 3.2 சதவீதமாக இருந்தது. பொதுவான போக்குவரத்து துறையில் முதன்மையாகவுள்ள வீதி வழிப் பொருள் போக்குவரத்துடன் தொடர்பான போக்குவரத்துத் நடவடிக்கைகள் வேளாண்மை, சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல், தயாரிப்பு மற்றும் கட்டடவாக்கத் துறைகளுடன் பெருமளவிற்குத் தொடர்புடையனவாக இருந்தன. கட்டடவாக்கம் தவிர்ந்த இத்துறைகள் அனைத்தும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு காரணிகளின் காரணமாக அவற்றின் வளர்ச்சிச் செயலாற்றத்தில் வீழ்ச்சிப் போக்கினைக் கொண்டிருந்தன. இவை வழிப் பொருள் போக்குவரத்தின் மீது எதிர்க்கணியமான தாக்கத்தினைக் கொண்டிருந்தமையின் விளைவாக 1997இலும் பார்க்க குறைவான வளர்ச்சி வீதமே காணப்பட்டது.

1998 இல் துறைமுக நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைக் காட்டின. அத்துறையின் செயலாற்றம் முக்கியமாக கையாளப்பட் சரக்குகளின் அளவில் தங்கியிருந்தது. கையாளப்பட்ட உள்நாட்டுச் சரக்குகளின் அளவு சிறிதளவு வீழ்ச்சியடைந்த வேளையில் 1998இல் கையாளப்பட்ட மாற்றிக் கப்பலேற்றல்கள் 2.0 சதவீதத்தினால் மாத்திரம் அதிகரித்தன. உள்நாட்டுச் சரக்குக் கையாளல் ஏற்றுமதிகளின் மெதுவான வளர்ச்சியினால் பாதிக்கப்பட்டது. மாற்றிக் கப்பலேற்றல் கையாளல் உள்நாட்டு பொருளாதாரப் பிரச்சனைகள் மற்றும் துறைமுகப் பணிகளை வழங்குவதில் இப் பிராந்தியத்தில் தோன்றியுள்ள போட்டி ஆகிய இரண்டினாலும் பாதிக்கப்பட்டது. கொழும்புத் துறைமுகத்துடன் தொடர்புபடுத்தப்பட்ட கப்பற் பாதைகளுக்கு அண்மையாக சலாலாவிலுள்ள (ஓமான்) நவீன வசதிகள் பொருத்தப்பட்ட மின றேசட் போன்ற புதிய துறைமுகங்கள் நிறுவப்படுகின்றமையானது மாற்றிக் கப்பல் ஏற்றல் போக்குவரத்துக்கள் இலங்கையைவிட்டு மாறிச் செல்லக் காரணமாயிற்று. இத்தகைய நவீன துறைமுகங்கள் மேலும் விரிவடைவதன் காரணமாக இலங்கைத் துறைமுகங்களின் இயலளவும் உற்பத்தித் திறனும் மேலும் மேம்பட்டாலொழிய வளர்ந்துவரும் அறைகூவல்களை இலங்கை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 70 சதவீதத்திற்கு வகைகூறும் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் பெரும்பாலும் தங்கியிருக்கும் நாடான இலங்கையில் வர்த்தகம் அதி கூடிய பங்கினை வகிப்பது இயற்கையானதோடு அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 23 சதவீதத்திற்கும் வகை கூறுகின்றது. 1998 இல் அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 22 சதவீதத்திற்கு வகைகூறியது. எனினும் இறக்குமதி,

ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை உள்ளடக்கிய வர்த்தகத்துறை 1997இன் 6.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1998இல் 4.5 சதவீதங் கொண்ட குறைந்த வளர்ச்சி வீதத்தினைப் பதிவு செய்தது. இத்துறையின் குறைந்த வளர்ச்சிக்கு பன்னாட்டு வர்த்தகம் சுருக்கமடைந்தமையே முக்கிய காரணமாகும். 1998இல் ஏற்றுமதி வர்த்தகத் துணைத்துறை1997இன் 12 சதவீதங்கொண்ட வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 0.1 சதவீதத்தினால் சிறிதளவாக வளர்ச்சியடைந்தது. கூட்டப்பட்ட பெறுமதியில் ஏறத்தாழ 42 சதவீதத்திற்குப் பொறுப்பாகவுள்ள இறக்குமதி வர்த்தகத் துணைத்துறை உண்மை நியதிகளில் 1997இன் 9.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1998 இல் 8.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இதற்கு அரிசி (42சதவீதம்) சீனி (29.6 சதவீதம்) மீன் உற்பத்தி (7சதவீதம்) போன்றவற்றினதும் மற்றும் வளமாக்கி (6.5சதவீதம்) பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள் (36.1 சதவீதம்) கோதுமை (8சதவீதம்) போன்ற இடைநிலைப் பொருட்களினதும் இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். 1998இல் உள்நாட்டு வர்த்தகத்துணைத்துறை 2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. பொருளாதாரத்தின் முதனிலை மற்றும் இரண்டாம் நிலைத் துறைகளின் வெளியீட்டு வளர்ச்சி குறைவடைந்தமையே இத்துறையின் மெதுவான வளர்ச்சிக்குப் பொறுப்பாக இருந்தது.

வங்கித்தொழில் ,காப்புறுதி, மற்றும் உண்மைச் சொத்துத்துறை 1997இன் 10.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 6.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. வெளிநாட்டு வர்த்தகம் மெதுவடைந்தமையானது வர்த்தக வங்கித் தொழிலின் இலாபத்தன்மையைக் கட்டுப்படுத்தியுள்ளது. குறிப்பாக 1998இன் இறுதிக் காலாண்டில் ருசிய நெருக்கடியின் பாதகமான தாக்கம் இலாபங்களைக் குறைத்தது. மேலும் மந்தமடைந்த பங்குச்சந்தை நிலைமைகளும் பங்குச் சந்தை தரகு நடவடிக்கைகளின் இலாபங்கள் குறைவடைய வழிவகுத்தன.

சுற்றலாத் துணைத்துறை 4.1 சதவீதங் கொண்ட உண்மை வளர்ச்சியைப் பதிவு செய்தது. இவ்வாண்டில் வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 381,063 ஆக விளங்கியதுடன் 4 சதவீத அதிகரிப்புமாகும். இவ்வளர்ச்சி முக்கியமாக, மொத்தச் சுற்றுலா வருகைகளில் ஏறத்தாழ 60 சதவீதத்திற்கு வகைகூறும் மேற்கு ஐரோப்பாவிலிருந்தான வருகைகளில் ஏற்பட்ட உறுதியான வளர்ச்சியினால் அடையப்பட்டு கிழக்காசிய பொருளாதார நிதியியல் நெருக்கடிகளினால் ஆசியப் பிராந்திய சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட மிகக் கடுமையான வீழ்ச்சியை எதிரீடு செய்யக் கூடியதாயிருந்தது. 1998இல் சுற்றுலாவிலிருந்தான மொத்த வருவாய்களும் 10 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொலர் 230 மில்லியனைப் பதிவு செய்தன. தரமிடப்பட்ட தங்குமிடத் துறையின் ஆண்டுத் தங்கல் வீதமும் 1997 இன் 49 சதவீதத்திலிருந்து 1998இல் 53 சதவீதத்திற்கு மேம்பட்டது. உள்நாட்டுச் சுற்றுலாவில் ஏற்பட்ட தொடர்ச்சியான அதிகரிப்பும் இத்துணைத்துறையின் வளர்ச்சி வேகத்திற்கு முக்கியமாகப் பங்களித்தன. உள்நாட்டு உல்லாசப் பயணிகள் தங்கிய இரவுகள் 1997உடன் ஒப்பிடுகையில் 1998இல் 15 சதவீதத்தினால் அதிகரித்தன.

காடாக்கல் மற்றும் மீன்பிடித் தொழிலையும் உள்ளடக்கிய வேளாண்மைத்துறையின் கூட்டிய பெறுமதி உண்மை நியதிகளில் 1998இல் 2.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன் நெல் மற்றும் மீன்பிடித் துணைத்துறையிலிருந்தே வளர்ச்சியைப் பெற்றுக் கொண்டது. வேளாண்மைத்துறையில் தனியொரு மிக முக்கிய பயிரான நெல் 1998இல் 18.3 சதவீதமான ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு 1997/98 பெரும் போகத்திலும் 1998 சிறு போகத்திலும் அதிகரித்த அறுவடையே காரணமாகும். உயர்வடைந்த நெல் உற்பத்தியானது அரிசி விலைகளில் சிறிதளவு வீழ்ச்சியை ஏற்படுத்தியதுடன் அரிசியின் இறக்குமதித் தேவைகளையும் குறைத்தது.

எனினும், பொதுவான பெருந்தோட்ட வேளாண்மைத்துறையின் செயலாற்றம் கலப்பானதாகக் காணப்பட்டது. மூன்று பெருந்தோட்டப் பயிர்களில் தேயிலை மட்டுமே சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதுவும் 1997 இன் 7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1 சதவீதமான சிறிதளவு வளர்ச்சியையே கொண்டிருந்தது. 1998இல் தேயிலை உற்பத்தி 280 மில்லியன் கிலோக்கிறாம்கொண்ட உச்ச மட்ட உற்பத்தியைப் பதிவு செய்தபோதும் இத்துணைத் துறையின் செயலாற்றம் ருசிய நெருக்கடிகளினாலும் இதனுடன் இணைந்து உலக சந்தையின் மேலதிக நிரம்பல் நிலைமைகளின் விளைவாக ஆண்டின் பின்னரைப்பகுதியில் மந்தமடைந்த விலைகளினாலும் பாதிக்கப்பட்டது. இறப்பர் துணைத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதி தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டாக 1998இல் மேலும் வீழ்ச்சியடைந்தமைக்கு (9 சதவீதத்தினால்) கிழக்காசிய நெருக்கடியின் தொடர்ச்சியான பாதகமான தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் கேள்வி குறைவடைந்தமையே காரணமாகும். தெங்குத் துணைத்துறையும் 1997இன் 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு மாறாக 1998இல் 3 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இதற்கு வானிலை நிகழ்வுகளின் பாதகமான தாக்கமே முக்கிய காரணமாகும்.எனினும் வீடமைப்பு போன்ற ஏனைய நோக்கங்களுக்காக தெங்குக் காணிகள் பயன்படுத்தப்படுகின்றமையும் தாக்கமொன்றினைக் கொண்டிருக்கக் கூடும்.

மற்றைய அனைத்து வேளாண்மை நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய "ஏனைய" வேளாண்மைத் துணைத்துறை ஐம்பது சதவீதத்திற்கும் கூடுதலான பங்கினைக் கொண்டுள்ளதுடன் பொதுவான வேளாண்மைத் துறையில் மிக முக்கியமான இடத்தையும் வகிக்கிறது. இத்துணைத் துறையிலுள்ள அனைத்து வகைகளினதும் இணைந்த வளர்ச்சி 1998இல் எதிர்க்கணியமாக இருந்தது. இத் துணைத்துறையில் காய்கறி உற்பத்தியின் கூட்டப்பட்ட பெறுமதி 5 சதவீதத்தினால் அதிகரித்தது. கோழிப் பண்ணைத் துணைத்துறையின் சிறந்த செயலாற்றம் காரணமாக விலங்கு வளர்ப்பு 4 சதவீத வளர்ச்சியுடன் மேம்பட்டது. எனினும் உருளைக் கிழங்கு, வெங்காயம், மற்றும் மிளகாய் போன்ற துணை உணவுப் பயிர்கள் 16 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தமையும் சிறு ஏற்றுமதிப் பயிர்களில் ஏற்பட்ட சிறிதளவு வீழ்ச்சியும் காய்கறி மற்றும் விலங்கு வளர்ப்பு வகைகளில் காணப்பட்ட சாதகமான தாக்கத்தினை எதிரீடு செய்தன. மலிவான இறக்குமதிகள் கிடைக்கத்தக்கதாக இருந்தமையே துணை உணவுப்பயிர்கள் துறையில் ஏற்பட்ட மிகக் கூடுதலான வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது.

மீன்பிடித்துறை 1998இன் 8.3 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் சாதகமான செயலாற்றத்தினைக் கொண்டிருந்தது. இம்மேம்பாடு கடல்மீன்பிடி, பண்ணை மீன் வளர்ப்பு, ஆகிய இரண்டிலும் காணப்பட்டது. கடல் மீன் உற்பத்தி அதிகரித்தமைக்கு கிழக்கு மாகாணத்தின் கரையோர மீன்பிடி மீண்டும் தொடங்கியமையே முக்கிய காரணமாகும். மீன்பிடித் துறைமுகங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை அரசாங்கம் ஊக்குவித்து வலுப்படுத்தியமையும் இவ்வுற்பத்தியின் அதிகரிப்புக்கு பங்களித்தது. பண்ணை மீன் உற்பத்தி அதிகரித்தமைக்கு உள்ளீடுகளின் சிறப்பான வழங்கலும் சிறந்த முகாமைத்துவமுமே காரணமாகும். இம் முன்னேற்றம் 1998இன் மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் ஏற்றுமதி வருவாய்களில் 45 சதவீத அதிகரிப்பில் பிரதிபலித்தது.

**அட்டவணை 2.2**
**ஏனைய வேளாண்மைத் துணைதுறைகளின் உள்ளமைப்பு**

| துறை | பெறுமதி கூட்டப்பட்ட (1996) நிலையான விலையில் (ரூ.மில்.) | | |
|---|---|---|---|
| | 1996(அ) | 1997(அ) | 1998(அ) |
| காய்கறிகள் | 31,189 | 31,676 | 33,126 |
| துணை உணவுப் பயிர் களுக்கான உதவுதொகை (ஆ) | 19,712 | 18,501 | 15,577 |
| சிறு ஏற்றுமதிப் பயிர்கள் (இ) | 7,137 | 7,874 | 7,825 |
| கரும்பு | 1,260 | 1,203 | 1,202 |
| புகையிலை | 1,496 | 1,553 | 1,569 |
| விலங்கு வளர்ப்பு (ஈ) | 6,065 | 6,293 | 6,560 |
| ஏனையவை | 8,662 | 8,763 | 8,837 |
| மொத்தம் | 75,521 | 75,863 | 74,696 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.

(ஆ) உப உணவுப் பயிர்கள், உருளைக்கிழங்கு, மிளகாய், சின்னவெங்காயம், பெரியவெங்காயம், பயறு, தட்டைப்பயறு மற்றும் குரக்கன் என்பனவற்றை உள்ளடக்கும்.

(இ) சிறு ஏற்றுமதிப் பயிர்கள், கோப்பி, மிளகு, கறுவா, கராம்பு, மரமுந்திரிகை மற்றும் வெற்றிலை என்பவற்றை உள்ளடக்கும்.

(ஈ) விலங்கு வளர்ப்பு, பால், முட்டைகள், கோழி வளர்ப்பு மற்றும் ஏனைய இறைச்சி வகையை உள்ளடக்கும்.

1998இன் சுரங்கமகழ்தல் கல்லுடைத்தல்துறை வீழ்ச்சியடைந்தது. யப்பான் மற்றும் கிழக்காசியாவிலிருந்து இரத்தினக்கற்கள் மற்றும் ஓரளவு அருங்கற்களுக்கான கேள்வி குறைவடைந்தமையானது சுரங்கமகழ்தல் துணைத்துறையினை மேலும் பாதித்தது. 1998இல் ஐ.அ.டொலர்களில் இரத்தினக்கற்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் முன்னைய ஆண்டின் வருவாய்களுடன் ஒப்பிடுகையில் 34 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. கனிப்பொருள் மணலின் கடற் போக்குவரத்துமற்றும் சுரங்கமகழ்தல் தொழிற்பாடுகளும் பாதுகாப்புக் காரணிகளினால் பாதிக்கப்பட்டன. எனினும் கல்லுடைத்தல் துணைத்துறை நன்முறையில் செயலாற்றியதன் மூலம் பாதகமான தாக்கத்தினை ஓரளவு எதிரீடு செய்தது. இதற்கு கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கமே முக்கிய காரணமாகும்.

## 2.3 செலவு

உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட கூட்டுக் கேள்வியானது பொருளாதாரத்தில் தனியார் மற்றும் அரச துறைகளின் நுகர்வு மற்றும் முதலீட்டுச் (மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம்) செலவினத் தொகையான மொத்த உள்நாட்டுச் செலவினத்தினால் அளவிடப்படுகிறது. 1998இல் மொத்த உள்நாட்டுச் செலவினம் ரூ.1,080 பில்லியனாக மதிப்பிடப்பட்டு 13 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக்காட்டியது.

நுகர்வுச் செலவினம் ரூ.823 பில்லியனாக மதிப்பிடப்பட்டு 1997இல் பதிவு செய்யப்பட்ட ரூ.736 பில்லியனைவிட 12 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. திரண்ட மொத்த உள்நாட்டுச் செலவினத்தில் 87 சதவீதத்தினைக் கொண்டுள்ள தனியார் நுகர்வுச் செலவினம் 1997இன் ரூ.644 பில்லியனிலிருந்து 1998இல் ரூ.724 பில்லியனுக்கு அதிகரித்து 12.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு உயர்ந்து செல்லும் தொழில்வாய்ப்பு, உண்மைக் கூலி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்தான தனியார் பணவனுப்பல்களில் ஏற்பட்ட வளர்ச்சி என்பனவற்றின் தாக்கத்தின் விளைவாக தனியார் துறையின் செலவிடத்தக்க வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் தூண்டுதலே காரணமாகும். இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 1997 உடன் ஒப்பிடுகையில்

1998இல் சிறிதளவு குறைந்த வீதத்திலேயே அதிகரித்தது. நீண்டகால நுகர்வுப் பொருட்களான உந்து ஈருருளிகள், உந்து ஊர்திகள், வீட்டுச் சாதனங்கள், போன்றவற்றின் மீதான செலவின வளர்ச்சி 1997இனைவிட விரைவான வேகத்தில் அதிகரித்தது. உணவு மற்றும் குடிபான வகையில் இறக்குமதி செய்யப்பட்ட பால்மா உற்பத்திப் பொருட்கள், பருப்பு வகைககள், மற்றும் பழ வகையின் மீதான நுகர்வுச் செலவு குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டிய வேளையில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மற்றும் மீன் உற்பத்திகளின் நுகர்வு வீழ்ச்சியடைந்தமைக்கு அவற்றின் உள்நாட்டு உற்பத்தி குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமையே காரணமாகும். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு 1998இல் தனியார் நுகர்வுச் செலவின் பொதுவான அதிகரிப்பில் பெரும்பாலும் 67 சத வீதத்திற்கு பங்களித்தது. உணவுப்பொருட்களிடையே அரிசி, மீன், மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்களின் மீதான செலவினம் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. பதனிடப்பட்ட உணவுவகைகள், பியர், ஆடைகள் மற்றும் மட்பாண்டப் பொருட்கள் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டியமையின் காரணமாக கைத்தொழில் பொருட்கள்மீதான செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த வளர்ச்சி வீதமொன்றினைப் பதிவு செய்துள்ளது.

1998இல் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் ரூ.257 பில்லியனுக்கு 19 சதவீதத்தினால் அதிகரித்து ள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தனியார் முதலீடுகள் 19 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மொத்த முதலீட்டில் 14 சதவீதத்திற்கு மட்டும் பங்களித்த அரச முதலீடு 18.4 சதவீதத்தினால் அதிகரித்தது. தனியார் துறை முதலீடுகள் முக்கிய துறைகளான கைத்தொழில், வீடமைப்பு கட்டடவாக்கம், போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் என்பனவற்றில் குவிந்து காணப்பட்டன. வீதி, கள, நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் போன்ற பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் பேணல் என்பன அரசமுதலீடுகளுக்கு வகை கூறின.

## 2.4 மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்

மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பொருட்களின் இறக்குமதிகள் (வெளிநாட்டு மூலவளங்கள்) என்பனவற்றை உள்ளடக்கி பொருளாதாரத்துக்குக் கிடைக்கத்தக்கதாகவிருந்த மொத்த மூலவளங்கள் 1997இன் ரூ.1,278 பில்லியனி லிருந்து 1998இல் ரூ.1,445 பில்லியனுக்கு அதிகரித்தது. ரூ.166 பில்லியன் அல்லது 13சதவீதம் கொண்ட இவ்வதிகரிப்பு நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட ரூ.124 பில்லியன் கொண்ட அதிகரிப்பின் மூலமும் வெளிநாட்டு மூலவளங்களில் ஏற்பட்ட ரூ.42 பில்லியன் கொண்ட அதிகரிப்பின் மூலமும் உருவாக்கப்பட்டதாகும். மொத்த மூலவளங்களில் 57 சதவீதம் நுகர்வின் மீதும் 18 சதவீதம் மூலதனவாக்கத்தின் மீதும் செலவிடப்பட்ட வேளையில் மீதி 25 சதவீதம் பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் ஏற்றுமதிகளின் மூலம் பங்களிப்புச் செய்யப் பட்டது. மூலவளப் பயன்பாட்டுத் தன்மையில் காணப்பட்ட முக்கியமான பண்புயாதெனில் நுகர்விற்கான விகிதத்தில் காணப்பட்ட சிறிதளவு வீழ்ச்சியும் முதலீட்டு விகிதத்தில் காணப்பட்டதொரு அதிகரிப்புமாகும்.

## 2.5 தேசிய சேமிப்புக்கள்

உள்நாட்டுச் சேமிப்புக்கள் மற்றும் தேறிய வெளிநாட்டு வருமானம் என்பனவற்றின் எண் தொகையான தேசிய சேமிப்புக்கள் 1997இன் ரூ.191 பில்லியனிலிருந்து 1998இல் ரூ.235 பில்லியனுக்கு

**அட்டவணை 2.3**
**நிலையான விலைகளில் (1996) மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும்**

| விடயம் | சதவீதப் பங்கு | | | சதவீத வளர்ச்சி | |
|---|---|---|---|---|---|
| | 1996(அ) | 1997(அ) | 1998(அ) | 1997 | 1998 |
| 1. மொத்த மூலவளங்கள் | 100 | 100 | 100 | 7.6 | 6.8 |
| மொ.உ.உ.சந்தை விலைகள் | 69 | 69 | 67 | 6.4 | 4.7 |
| பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் | 31 | 31 | 33 | 10.5 | 11.5 |
| 2. பயன்பாடு | 100 | 100 | 100 | 7.6 | 6.8 |
| நுகர்வு | 59 | 59 | 59 | 7.1 | 7 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 17 | 16 | 18 | 5.1 | 15.3 |
| அரசு | 2 | 2 | 2 | 14.4 | 15.8 |
| அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார்துறை | 14 | 14 | 15 | 3.7 | 15.2 |
| இருப்புக்களின் மாற்றம் | 0 | 0 | 0 | -92.4 | -30.5 |
| பொருட்களினதும்காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 24 | 25 | 24 | 11.6 | 1.0 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**அட்டவணை 2.4**
**நடைமுறைச் சந்தை விலைகளில் தேசிய சேமிப்புக்கள்**

ரூ.மில்லியன்

| வகை | 1996(அ) | 1997(அ) | 1998(அ) |
|---|---|---|---|
| 1. மொ.உ.உ. சந்தை விலைகளில் | 768,128 | 890,272 | 1,014,504 |
| 2. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 117,691 | 154,237 | 191,889 |
| 3. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -11258 | -9409 | -11529 |
| 4. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றல்கள் | 39,242 | . 46,472 | 54,785 |
| 5. தேசிய சேமிப்புக்கள் | 145,674 | 191,301 | 235,145 |
| 6. உள்நாட்டு சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 2) | 15.3 | 17.3 | 18.9 |
| 7. தேசிய சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 5) | 19.0 | 21.5 | 23.2 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மத்திய வங்கி.

சிறப்புக்குறிப்பு 4

## மொத்த உள்நாட்டு உற்பத்தியின் காலாண்டு ரீதியான மதிப்பீடுகள்

மொ.உ. உற்பத்தி என்பது வெளியீட்டுப் பெறுமதியின் மதிப்பீடு அல்லது மாற்றாக, பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து பொருளாதாரத்தில் உருவாக்கப்பட்ட வருமானத்தின் மதிப்பீடு எனப்படும். பொருளாதாரச் செயலாற்றத்தின் குறுக்குப் பிரிவுகளினதும் காலத்தொடர்களினதும் பகுப்பாய்வுகளை மேற் கொள்வதற்குமாக மொ.உ. உற்பத்தி மதிப்பீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. கடந்த ஆண்டுகளின் பொருளாதாரத்தின் அமைப்பியல் மாற்றங்களை பரீட்சிப்பதற்கும் இவை பயன்படுத்தப் படுகின்றன. மேலும் பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளின் மாற்றங்களுக்கேற்ப பொருளாதாரத்தின் ஒத்துணர்வினை மதிப்பீடு செய்து கொள்ளவும் இம்மதிப்பீடுகளால் முடியும்.

1930களில் ஏற்பட்ட உலகளாவிய பொருளாதார மந்தம் பொருளாதார செயலாற்றம் தொடர்பான விபரமான தகவல்களுக்கான தேவையை வலியுறுத்தியது. இது பல நாடுகள் மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளைத் திரட்டத் தொடங்குவதற்கு வழிவகுத்தது. 1939இல் சர்வதேச சங்கம் அதன் வருடாந்த உலகப் பொருளாதார அளவீட்டில் 26 நாடுகளின் தேசிய வருமான மதிப்பீடுகளை முதலில் வெளியிட்டது. சிறந்த நிலையான பொருளாதார அமைப்புக்களுடன் கூடிய பொருளாதார செயலாற்றத்தினைப் பகுப்பாய்வு செய்வதற்கு வருடாந்த மதிப்பீடுகள் பயனுள்ளதாக இருந்தபோதும், கூடியளவிற்கு இயக்கத் தன்மையைக் கொண்ட பொருளாதாரங்களைப் பொறுத்தவரை வருடாந்த மதிப்பீடுகள் ஆண்டுப்பகுதிக்குள் இடம்பெறும் மாற்றங்களைப் பிரதிபலிக்கமாட்டா என்பதனால் அவை வரையறுக்கப்பட்ட பயன்பாட்டினையே கொண்டிருக்கும். தரப்படுகின்ற ஆண்டுப் பகுதிக்குள், இயற்கையான பருவகால மாற்றங்களுக்குப் புறம்பாக பொருளாதார நடவடிக்கைகளும் மாற்றங்களுக்கு உட்படலாம். ஆண்டு மதிப்பீடுகள் கிடைக்கும்வரை காத்திருப்பதிலும் பார்க்க, கொள்கை வகுப்போர் பொருளாதாரத்தினைத் தொடர்ச்சியாக மதிப்பிடுவதற்கு காலாண்டுத்தரவுகள் உதவுகின்றன. அத்தகைய மதிப்பீடுகள் பொருளாதார நடவடிக்கையில் திருப்புமுனைகள் எதுவும் இருப்பின் அவற்றை இனங்கண்டு கொள்ளவும் தேவையானவிடத்து உரிய நேரத்தில் நடவடிக்கைகளை எடுக்கவும் அவர்களை இயலச் செய்கிறது. இதன்படி, காலாண்டு மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள் பொருளாதார ஆய்வுகளுக்கு மேலதிக தகவல் தொகுதியொன்றை வழங்குகின்றன. எனவே தரவு முறைகள் நியாயமான அளவிற்கு அபிவிருத்தியுற்றுள்ள நாடுகள் ஆண்டு மொ.உ. உற்பத்தி மதிப்பீடுகளை முழுமைப் படுத்துவதற்காக காலாண்டு மொ.உ.உற்பத்தி மதிப்பிடுகளைத் திரட்டத் தொடங்கியுள்ளன.

இலங்கை மத்திய வங்கி 1952ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளைத் திரட்டியது. 1998இல் முதற் தடவையாக காலாண்டு மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள் திரட்டப்பட்டு வெளியிடப்பட்டன. 1998ஆம் ஆண்டிற்கான முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுத் தரவுகள் 1997 மற்றும் 1996ஆம் ஆண்டுக்குரிய ஒப்பிடத்தக்க தரவுகளுடன் 1998ஆம் ஆண்டுப் பகுதியில் வெளியிடப்பட்டன. வருடாந்த மதிப்பீடுகளைப் பூரணப்படுத்தும் பொருட்டு காலாண்டு தேசிய வருமானத் தொடர்களை நிறுவுவதற்கான இம் முயற்சி இயக்க நிலையும் போட்டித் தன்மையும் கொண்ட பொருளாதார சூழலொன்றில் கொள்கை வகுப்போரினதும் வாணிப சமூகத்தினரதும் வளர்ந்து வரும் கேள்வியை ஈடுசெய்ய எடுக்கப்பட்டதாகும். உரிய நேரத்தில் கிடைக்கக் கூடியதாகவுள்ள தகவல்கள், தோற்றம் பெற்றுவரும் நிகழ்வுகளைக் கவனத்திற் கொண்டு கொள்கை வகுப்போர் விரைவான மீட்பு நடவடிக்கைகளை எடுப்பதனை இயலச் செய்வதனால் அத்தகைய காலாண்டு மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள் சிறந்த பொருளாதார முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கின்றன. மேலும், காலாண்டு மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை நேரத்திற்கு பரப்புவது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு தேவையாகவுள்ள அனைத்தையும் உள்ளடக்கிய பேரண்டப் பொருளாதார தரவுகளை வழங்கக் கூடியதாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

காலாண்டு மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள் உற்பத்தி, வருவாய் உருவாக்கம் மற்றும் உள்ளீட்டுச் செலவுகள் என்பன தொடர்பான மிக அண்மைக்கால அமைப்பினைப் பிரதிபலிக்கச் செய்வதற்காக 1996இனை அடிப்படை விலை ஆண்டாகக் கொண்டு திரட்டப் பட்டன. இதன்படி, 1982இனை அடிப்படை விலை ஆண்டாகக் கொண்டு 1997இற்காக வெளியிடப்பட்ட ஆண்டு மொ.உ. உற்பத்தி மதிப்பீடுகள் அடிப்படைக் காலத்திற்கு மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்கு ஒத்துச் செல்லும் விதத்தில் மாற்றியமைக்கப்பட்டன. 1998ஆம் ஆண்டு மொ.உ. உற்பத்தி மதிப்பீடுகளும் 1996 இனை அடிப்படை விலை ஆண்டாகக் கொண்டே திரட்டப்

பட்டன. எனினும், காலாண்டு மதிப்பீடுகளின் கூட்டுப் பெறுமதியும் ஆண்டு மதிப்பீடுகளின் பெறுமதியும் சமமாக இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. காலாண்டு மதிப்பீடுகளின் திரட்டல்கள் உற்பத்தி, விற்பனைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதிப் புள்ளி விபரங்கள் போன்ற குறுங்கால புள்ளி விபர குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டிருந்தமையே இதற்கான காரணமாகும். ஆண்டு மதிப்பீடுகளுக்குப் பயன்படுத்தப்பட்ட சில தரவுகள் எடுத்துக்காட்டாக கணக்கீட்டுத் தரவுகள் அடிக்கடி கிடைக்கக் கூடியனவாக இல்லை. சில துறைகளில் புள்ளி விபர முறைகள் ஆண்டு தரவுகளை வழங்குவதற்காக இணைக்கப்பட்டுள்ள போதும் காலாண்டு அடிப்படையில் நம்பகரமான புள்ளி விபரங்களைத் திரட்டுவதற்கு ஏற்ற முறையில் அவற்றின் முறைகளைச் சீர்படுத்துவதில் மெதுவான தன்மை காணப்படுகின்றது எனினும் பிரயோக முறைகள் மற்றும் தரவுகளின் கிரமமான சேகரிப்பு என்பன மூலமே புள்ளி விபரத்தரவுச் சேகரிப்பு முறைகளில் முன்னேற்றங்கள் வழமையாகப் பெற்றுக் கொள்ளப்படுகிறது என்பதனைக் கவனித்தல் வேண்டும். மிகச் சிறந்த தகவல் முறைகளையும் காலாண்டு மதிப்பீட்டுத் திரட்டல்களையும் கொண்டுள்ள அபிவிருத்தியடைந்த நாடுகளில்கூட கிடைக்கத்தக்க தரவுகளுடனேயே ஆரம்ப மதிப்பீடுகள் தயாரிக்கப் படுவதுடன் இறுதிப் பெறுமதிகளாக அவற்றைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அம்மதிப்பீடுகள் பல தடவைகள் திருத்தப்படுகின்றன. காலாண்டு மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளைத் திரட்டுகின்ற நிறுவனங்கள் பல்வேறுபட்ட ஏனைய மூலங்களிலிருந்தான தகவல்களைப் பயன்படுத்துவதற்குப் புறம்பாக குறைநிரப்புத் தகவல்களை சேகரிப்பதற்காக தமது சொந்த மாதிரி அளவீடுகளையும் நடத்துகின்றன. இக்காலாண்டு மதிப்பீடுகளினது அபிவிருத்தியின் அடுத்த நடவடிக்கையாக உற்பத்தியின் காலாண்டு மதிப்பீடுகளை தேசிய கணக்குகளின் செலவுப்பக்க மதிப்பீடுகளுடன் எடுத்துக்காட்டாக மொத்த உள்நாட்டு மற்றும் மொத்தத் தேசிய செலவுகளுடன் இணங்குவிப்பதாகவே இருக்கும்.

பொருளாதார மாற்றங்களை மிகத் தெளிவாகக் காட்டக்கூடிய உலகளாவிய பொருளாதாரத்தின் பன்னாட்டு தகவல் தளமொன்றினை நிறுவுவதற்காக பன்னாட்டு நாணய நிதியம் அதன் சிறப்புத் தரவு பரப்பல் முறை மற்றும் பொதுத்தரவு பரப்பல்முறை என்பனவற்றின் கீழ் அதன் உறுப்பு நாடுகள் காலாண்டு மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளைத் திரட்டுவதற்கு ஊக்குவித்து வருகின்றது. குறுங்கால இடைவெளிகளில் மிக விபரமான தகவல்களைத் தேவையாகக் கொண்டுள்ள முதலீட்டாளர்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் தேவைகளை இத்தகைய முறை ஈடு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. ப.நா.நிதிய தேவைப்பாடுகளின்படி, தமது மூலவளத் தேவைகளை ஈடு செய்வதற்கு பன்னாட்டு மூலதனச் சந்தைகளுள் நுழைய திட்டமிடுகின்ற நாடுகள் சிறப்பு தரவு பரப்பல் முறையினை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. இதன் கீழ் காலாண்டு மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளைப் பரப்புவது தேவைப்பாடுகளில் ஒன்றாகவுள்ளது. பொதுத் தரவுப் பரப்பல் முறை மற்றும் சிறப்புத் தரவு பரப்பல்முறை என்பன அறிமுகப்படுத்தப்பட்டதற்கான முக்கியமான காரணங்களிலொன்றாக மெச்சிக்கோ நெருக்கடி விளங்கியது. இந் நெருக்கடிக்கு பற்றாக்குறையான தகவல்களின் விளைவாக தெளிவான தன்மை போதாமல் இருந்தமையே முக்கிய காரணமாகும். மிக குறுகியகால இடைவெளியில் மிகத் தெளிவான தகவல்கள் கிடைக்கக் கூடியதாக இருந்திருக்குமாயின் இந் நெருக்கடியைத் தவிர்த்திருக்க முடியும் என நம்பப்படுகின்றது.

நிலையான செலவு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (1996=100) காலாண்டு மதிப்பீடுகள் வளர்ச்சி வீதம் 1997 மற்றும் 1998

| துறை | 1997 | | | | 1998 | | | | ஆண்டு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | 1997 | 1998 |
| 1. வேளாண்மை காடாக்கம் மீன்பிடி | -0.5 | 3.6 | 1.9 | 7.5 | 3.5 | 1.0 | -0.4 | 5.6 | 3.0 | 2.5 |
| 2. சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் | 4.6 | 13.7 | 10.8 | -12.3 | -9.7 | -5.9 | -4.9 | 0.0 | 3.8 | -5.4 |
| 3. தயாரிப்பு | 9.1 | 10.6 | 10.3 | 6.8 | 7.7 | 6.7 | 7.8 | 3.7 | 9.1 | 6.3 |
| 4. கட்டடவாக்கம் | 5.7 | 6.1 | 5.9 | 3.9 | 8.5 | 9.0 | 9.0 | 2.0 | 5.4 | 7.1 |
| 5. பணிகள் | 5.7 | 7.8 | 8.7 | 6.2 | 6.4 | 4.7 | 5.2 | 4.6 | 7.1 | 5.2 |
| மொ.உ.உற்பத்தி | 4.6 | 7.4 | 7.3 | 6.1 | 5.7 | 4.4 | 4.5 | 4.4 | 6.3 | 4.7 |

அதிகரித்தது. ரூ.44 பில்லியன் கொண்ட இவ்வதிகரிப்பில் ஏறத்தாழ 86 சதவீதம் அதிகரித்த உள்நாட்டுச் சேமிப்புக்களினால் வழங்கப்பட்டது. உள்நாட்டுச் சேமிப்புக்களின் விகிதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 17 சதவீதத்திலிருந்து 19 சதவீதத்திற்கு கணிசமாக அதிகரித்தது. வெளிநாட்டு வருமானத்தின் முக்கிய மூலமான தேறிய தனியார் மாற்றல்கள் 1998இல் ரூ.55 பில்லியனுக்கு 17.9 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, தேசிய சேமிப்பு விகிதம் 1997இன் 21.5 சதவீதத்திலிருந்து 1998இல் 23.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. வெளிநாட்டில் உழைக்கும் இலங்கையர்களின் சேமிப்புக்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4 சதவீதத்திற்கு வகைகூறுவது இதிலிருந்து தென்படுகின்றது. உலகளாவிய பொருளாதார மந்த நிலைமைகளும் பண்ட விலைகளின் வீழ்ச்சியும் வெளிநாட்டுத் தொழிலுக்கான வாய்ப்புக்களைப் பாதிக்கக் கூடுமாகையால் உள்நாட்டுச் சேமிப்புக்களை அதிகரிப்பதற்கு தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது.